2021 செப்டம்பர் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து நல்ல பதில் கிடைத்திருக்கிறது, நன்றி சொல்லிவிட்டு அப்படியே அமருங்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.*

6. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வெ. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வெ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வெ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.